நெல்லை மாவட்டம், வள்ளியூர் நேரு செவிலியர் கல்லூரியில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் நடத்திய கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான பேச்சுப்போட்டியினை சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு துவக்கி வைத்தார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா மாவட்ட ஊராட்சி மன்ற குழு தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ், மாநில ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு உள்பட பலர் உள்ளனர்.

நெல்லை - வள்ளியூரில் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் நடத்தும்

கல்லூரி மாணவ - மாணவியருக்கான பேச்சுப் போட்டி!

சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு - வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ் - கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் துவக்கி வைத்தனர்!

நெல்லை, பிப். 21–

நெல்லை மாவட்டம், வள்ளியூர் நேரு செவிலியர் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் நடத்தும் நிகழ்வில் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு பங்கேற்று கல்லூரி மாணவ, மாணவியருக்கான பேச்சுப் போட்டியினை மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா, மாவட்ட ஊராட்சி மன்ற குழுத் தலைவர் வி. எஸ்.ஆர்.ஜெகதீஸ், மாநில ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்தார்.

பின்னர் பேரவை தலைவர் மு.அப்பாவு பேசியதாவது: –

முதலமைச்சர் அவர்கள் சமூக நீதி, சமத்துவம், சுயமரியாதை, மொழிப்பற்று, இன உரிமை, மாநில சுயாட்சி ஆகிய தத்துவங்களின் அடிப்படையில் தான் தமிழ்நாடு பயணிக்க வேண்டும். தமிழ்நாட்டின் வளர்ச்சி என்பது சமூகத்தின் வளர்ச்சியாக,வாழ்க்கை வளர்ச்சியாக, சிந்தனை வளர்ச்சியாக,பண்பாட்டு வளர்ச்சியாக இருக்க வேண்டும். பொருளாதாரம், கல்வி, சமூகம், சிந்தனை, செயல்பாடு ஆகிய ஐந்தும் ஒரு சேர வளர வேண்டும். அதுதான் கனவு காணும் வளர்ச்சி, அதற்கு உங்கள் வழிகாட்டுதல்கள் தேவை என்று கூறியுள்ளார்கள். அதன்படி நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

முதலமைச்சர் அவர்கள் மாணவ, மாணவியர்கள் கல்வியில் தலைசிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக கல்வியில் பல முன்னேற்றங்களை கொண்டு வந்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். பெண் கல்வி, உயர்கல்வியல் இந்தியாவிலே தமிழ்நாடு தான் தலை சிறந்த மாநிலமாக திகழ்ந்து வருகிறது. மாணவ, மாணவியர்கள் அனைவரும் பேச்சுப்போட்டியில் கலந்து கொண்டு தனது பேச்சுத் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும். இன்று பேச்சுப் போட்டியினை துவக்கி வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழ்மொழி உலக அளவில் புகழ்பெற்றுள்ளது. இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், கனடா போன்ற 7 நாடுகளில் தமிழ் மொழி ஆட்சி மொழியாக உள்ளது. உலகத்தில் மூன்று மொழிகளில் தமிழ் மொழி முதன்மை மொழியாக உள்ளது. பிஷப்கார்டுவெல் அவர்கள் 18 மொழியை காற்று தெரிந்தவர். உலகத்தில் தலை சிறந்த மொழி தமிழ் மொழி என்று எடுத்துரைத்துள்ளார். அவர் தமிழுக்கு ஒப்பிலக்கணம் தந்தவர் அதனால்தான் பிஷப் கார்டுவெல் தமிழறிஞர் பிஷப் கார்டுவெல் என்று போற்றப்பட்டார். பிஷப் கார்டுவெல் நினைவினை போற்றும் விதமாக அவர் வாழ்ந்து மறைந்த இடையன்குடியில் பிஷப் கார்டுவெல் இல்லம் அரசு இல்லமாக முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் நிறுவப்பட்டுள்ளது.

நம்முடைய மறைந்த தலைவர்கள் தந்தை பெரியார், கர்மவீரர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் போன்ற தலைவர்கள் தமிழ்நாட்டில் ஆட்சி மொழி எங்கள் தமிழ்மொழி தான் என்றும், அதற்கு அடுத்தபடியாக இரண்டாம் மொழியாக ஆங்கிலம் என்பதால் ஆங்கிலம் கற்று தமிழ் வழியில் கல்வி படித்தவர்கள் விண் வெளிமின் ஆராய்ச்சி போன்ற பல் வேறு துறைகளிலும், அயல் நாட்டில் பல்வேறு உயர் பதவிகளிலும் பணியாற்றி வருகிறார்கள், என்பது மிகப் பெருமைக்குரிய செயலாகும்.

இன்று நடைபெறும் தமிழ் போட்டிக்கான தலைப்புகள் ஒன்றே குலம், ஒருவனே தேவன், மனித நேயம் ஓங்கட்டும், மதவெறி நீங்கட்டும், மக்களாட்சியின் மாண்பும் மதச்சார்பற்ற அரசும், ஏன் வேண்டும் இட ஒதுக்கீடு, இந்திய சமூக நீதி வரலாற்றில் தமிழ்நாட்டின் பங்கு, சதிக்கு கால் முளைத்து சாதியானது, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், சமகால ஜனநாயகம் எதிர் கொள்ளும் சவால்கள், விடுதலைப் போரில் தமிழர்களின் பங்கு, தமிழர்களாய் உயர்வோம், தலை நிமிர்ந்து நிற்போம் போன்ற பல்வேறு தலைப்புகளில் மாணவர்களுக்கு போட்டிகள் நடத்தப்பட்டு, முதல் மூன்று இடங்களை பிடிக்கும் மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். பேச்சுப் போட்டிகளில் கலந்து கொண்டு சிறப்பித்த மாணவர்களுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு பேரவைத் தலைவர் மு.அப்பாவு பேசினார்.

நிகழ்வில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு, மாவட்ட சிறுபான்மையினர் நல அலுவலர் செல்வி, டி.டி.என்.கல்வி குழுமத் தலைவர் டி.டி.என். லாரன்ஸ், வள்ளியூர் பேரூராட்சி தலைவர் ராதா, மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் சாலமன் டேவிட், பாஸ்கர், ஒன்றியச் செயலாளர் ஜோசப்பெல்சி உள்பட ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் பலர் கலந்து கொண்டனர்.

மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் தலைமை! மயிலம் தொகுதி

ஒலக்கூர் ஒன்றியத்தில் எஸ்.தரணிவேந்தன் எம்.பி. நன்றி தெரிவித்தார்!

திண்டிவனம், செப். 21-

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ஒலக்கூர் ஒன்றியத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தலைமையில் ஆரணி எம்.பி. எம்.எஸ்.தரணி வேந்தன் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

நடைபெற்ற ஆரணி நாடாளுமன்றத் தேர்தலில் திமுக சார்பில் திருவண்ணாமலை வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.தரணி வேந்தன் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு அமோக வெற்றி பெற்றார்.

இதையடுத்து விழுப்புரம் வடக்கு மாவட்டம் ஒலக்கூர் மேற்கு ஒன்றியம் நெய்குப்பி, தாதாபுரம் ஆகிய ஊராட்சிகளில் உள்ள வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில்

ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் எம். எஸ். தரணி வேந்தன் கலந்துகொண்டு வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

அப்போது அவர் பேசுகையில் 100 நாள் வேலை திட்டத்தில் வழங்கும் ஊதியத்தை உயர்த்தி வழங்க ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், மேலும் செஞ்சிக்கோட்டையில் இழுவை ரயில், மயிலம் பகுதியில் விவசாயிகள் உளுந்து சேமிக்கும் வகையில் ஒன்றிய அரசு உளுந்து கிடங்கு அமைக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் வைக் கப்பட்டுள்ளதாக ஆரணி எம்.பி. எம்.எஸ். தரணிவேந்தன் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், ஒன்றியச் செயலாளர் ராஜாராமன், திண்டிவனம் நகரச் செயலாளர் ஆசிரியர் கண்ணன், ஒன்றிய அவைத் தலைவர் அமராவதி ஒன்றிய துணைச் செயலாளர் நெய்குப்பி காளி, பொதுக்குழு உறுப்பினர் சாந்தி ஏழுமலை, மாவட்டக் கவுன்சிலர் மனோ சித்ரா ராஜேஸ் வரன், விழுப்புரம்வடக்கு மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி அமைப்பாளர் அண்ணாதுரை, மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அணி அமைப்பாளர் செந்தில்குமார், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ஜெயபிரகாஷ் உள்ளிடோர் கலந்துகொண்டனர்.

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், வசந்தம் க.கார்த்திகேயன் வழிகாட்டுதலின்படி, சின்னசேலம் கிழக்கு ஒன்றியத்திற்குட்பட்ட மூங்கில்பாடி, எலவடி, மேல்நாரியப்பனூர், இராயப்பனூர், அ.வாசுதேவனூர், தாகம் தீர்த்தாபுரம், பூண்டி, அம்மையாகரம், தோட்டப்பாடி, பெத்தாசமுத்திரம் ஆகிய ஊராட்சிகளில் உள்ள பாக முகவர்கள்,பாக உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் ஒன்றியக்குழுத் பெருந்தலைவர், ஒன்றியக் கழகச் செயலாளர் (கி) வழக்கறிஞர் மா.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளராக கள்ளக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் கு.சீ.வெ.தாமரைக்கண்ணன் கலந்து கொண்டு தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினார். இந்நிகழ்வில் பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள், மாவட்ட, ஒன்றியக் கழக நிர்வாகிகள், கவுன்சிலர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கிளைச் செயலாளர்கள், சார்பு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களை விழுப்புரம் இல்லத்தில், புதிதாக நியமிக்கப்பட்ட விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன் உடனிருந்தார்.

வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களை விழுப்புரம் இல்லத்தில், புதிதாக நியமிக்கப்பட்ட விழுப்புரம் மத்திய மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ப.அன்பரசு உடனிருந்தனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி

புதுச்சேரி மாநிலம் முழுவதும் நல உதவிகள் வழங்கி கொண்டாடுவோம்!

தி.மு.க. மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

புதுச்சேரி, பிப். 21 -

புதுச்சேரி மாநில தி.மு. கழக அவசர செயற்குழுக் கூட்டம் லப்போர்த் வீதியில் உள்ள தலைமைக் கழக அலுவலகத்தில் நடந்தது.

கூட்டத்திற்கு அவைத் தலைவர் எஸ்.பி.சிவக்குமார் தலைமை தாங்கினார். துணை அமைப்பாளர் வி.அனிபால் கென்னடி எம்.எல்.ஏ., பொருளாளர் இரா.செந்தில் குமார் எம்.எல். ஏ., மாநில துணை அமைப்பாளர்கள் ஏ.கே.குமார், அ. தைரிய நாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநில கழக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவருமான இரா. சிவா அனைவரையும் வரவேற்று, ஆலோசனைகள் வழங்கினார்.

கூட்டத்தில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நந்தா சரவணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சண். குமரவேல், கே.எம்.பி. லோகையன், டி. அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் சி. கோபால், வே.கார்த்திகேயன், வெ. ராமசாமி, ப. செல்வநாதன், பா. செ. சக்திவேல், ந. தங்கவேலு, பெ. வேலவன், ஆர். ரவீந்திரன், எஸ். தர்மராஜன், மு. பிரபாகரன், எஸ். எஸ். செந்தில்குமார், நா. கோபாலகிருஷ்ணன், பெ. பழநி, எஸ். நர்கீஸ், தொகுதி செயலாளர்கள் இரா. சக்திவேல், வ.சீத்தாராமன், பாண்டு அரிகிருஷ்ணன், செ. நடராஜன், து. சக்திவேல், ஜி.பி. சவுரிராஜன், எல். மணிகண்டன், கோ. தியாகராஜன், ரா. ஆறுமுகம், ப. வடிவேல், க. ராஜாராமன், பி. சா. இளஞ்செழியபாண்டியன், கலிய. கார்த்திகேயன், சே. ராதாகிருஷ்ணன், ம. கலைவாணன், சி. சத்தியவேல், அணிகளின் அமைப்பாளர்கள் மாணவர் அணி எஸ்.பி. மணிமாறன், இலக்கிய அணி சீனு. மோகன்தாசு, தொழுச அண்ணா அடைக்கலம், வழக்கறிஞர் அணி ச. பரிமளம், மகளிர் அணி காயத்ரி ஸ்ரீகாந்த், தொண்டர் அணி வீரன் (எ) விரய்யன், விவசாய அணி வெ. குலசேகரன், மீனவர் அணி ந. கோதண்டபாணி,

ஆதிதிராவிடர் நலக்குழு சி. ஆறுமுகம், கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை கி. சங்கர் (எ) சிவசங்கரன், பொறியாளர் அணி ஆ. அருண்குமார், நெசவாளர் அணி ந. செந்தில்முருகன், விளையாட்டு மேம்பாட்டு அணி ந. ரவிச்சந்திரன், மருத்துவர் அணி லூ. ஆனந்த் ஆரோக்கியராஜ், தகவல் தொழில்நுட்ப அணி தாமோ. தமிழசரன், மகளிர் தொண்டர் அணி சுமதி, தொண்டர் அணி தலைவர் கோபிநாத், வர்த்தகர் அணி துணைத் தலைவர் குரு (எ) சண்முகசுந்தரம், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ரெமிஎட்வின், உத்தமன், கிருபாசங்கர், ஆதிதிராவிடர் அணி துணை அமைப்பாளர் தெய்வேந்திரன், அன்பழகன், தொண்டர் அணி துணை அமைப்பாளர் பாலகுரு, தகவல் தொழில்நுட்ப அணி சிவதாசன், மாணவர் அணி துணை அமைப்பாளர் ஸ்வீபன் ராஜ், பொறியாளர் அணி எழிலரசன், இலக்கிய அணி துணை அமைப்பாளர் ஆளவந்தார், ராஜசேகரன், கோதண்டம் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

கூட்டத்தின் முடிவில் ராஜ்பவன் தொகுதி செயலாளர் ஜெ. மோகன் நன்றி கூறினார்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன: -

இந்திய ஒன்றியத்தில் தனது ஆற்றல் மிக்க தலைமையுடனும், முற்போக்கு பார்வையுடனும் சமூக நீதி, சமத்துவம், மனித உரிமைகளுக்காக தொடர்ந்து போராடி, தமிழ்நாட்டு மக்களின் கல்வி, சுகாதாரம், உள்கட்டமைப்பு, வேலைவாய்ப்பு போன்றவற்றை வலுப்பெறச் செய்து அவர்களின் நலன் காக்கின்ற ஒரு குறிப்பிடத்தக்க தலைவராக வானுயர உயர்ந்துள்ள திராவிட இயக்க வழித்தோன்றல், நம் கழகத் தலைவர், நான்காம் தலைமுறை திராவிட மாடல் அரசின் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளில் அவர் பல்லாண்டு காலம் வாழ வேண்டும் என்று புதுச்சேரி மாநில கழகம் நெஞ்சார வாழ்த்துவதுடன், அவர் பிறந்த நாளான மார்ச்-1 அன்று நாம் கொண்டாடி மகிழ்வது மட்டுமல்லாது, ஏழை, எளிய மக்களும் கொண்டாடி மகிழும் வண்ணம் அவர்களுக்கு தேவையான நலத்திட்ட உதவிகளை மாநிலம் முழுக்க செய்வது என்றும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

புதுச்சேரி மாவட்டத்தில் உள்ள 23 தொகுகளில், தொகுதி கழகம் மற்றும் கிளைக் கழகங்கள் சார்பில் அமைக்கப்பட்டுள்ள பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் பெருந்தகை அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செய்வதுடன், ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள கல்வெட்டுகளை புதுப்பித்தும், கொடிக்கம்பங்களை புதுப்பித்தும் அவற்றில் கழகத்தின் இருவர்ணக் கொடியேற்றி வைத்து இனிப்பு வழங்கி, கழகத்தின் கொள்கை விளக்கப் பாடல்களை ஒலிக்கச் செய்து எழுச்சியுடன் கொண்டாடுவது என்றும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

மார்ச் -1ஆம் தேதி அன்று புதுச்சேரி அரசு மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகளுக்கு கணையாழி அணிவிப்பதுடன், பால், பழம், ரொட்டி மற்றும் பேபி கிட்ஸ் வழங்கி சிறப்பிப்பதென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, புதுச்சேரி மாநிலம் முழுவதும் கழக நிகழ்ச்சிகள் நடத்துவதென்றும், தொகுதிகள் மற்றும் கிளைக் கழகங்கள்தோறும் பொதுக்கூட்டங்கள் நடத்தி, ஏழை, எளியோர்க்கு நலத்திட்டங்கள் வழங்குவது. கருத்தரங்கம், பட்டிமன்றம், மரக்கன்றுகள் வழங்குதல், விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசு வழங்குதல், அறுசுவை உணவு வழங்குதல் என அனைவரும் வாழ்த்திடும் வகையில் மார்ச் மாதம் முழுவதும் தொடர் நிகழ்ச்சிகளை நடத்தி கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாளை எழுச்சியுடனும், பார்போற்றும் வகையிலும் கொண்டாடுவது என்றும் இதற்காக மாநில கழகத்தின் சார்பில் அமைக்கப்படும் குழுவினரின் வழிகாட்டுதலோடு கழக நிர்வாகிகள் செயல்படுவதென்று இக்கூட்டம் ஒருமனதாக தீர்மானிக்கிறது.

21.02.2025 வெள்ளிக்கிழமை அன்று கடலூர் மாவட்டத்தில் நடைபெறும் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க புதுச்சேரி மாநிலம் வழியாக வருகைதரும் நம் கழகத் தலைவர், தமிழ்நாடு திராவிட மாடல் அரசின் முதல்வர் அவர்களை புதுச்சேரி மாநில கழகம் சார்பில் சிறப்பாக வரவேற்பு அளித்து, அவரை கடலூர் மாவட்டத்திற்கு வழியனுப்பி வைப்பது என்றும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

நம் கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் அவர்களின் அனுமதியோடு, புதுச்சேரி மாநில கழகத்திற்கு என்று ஈசிஆரில் கட்டப்பட உள்ள கலைஞர் அறிவாலயத்தின் ஆரம்ப கட்ட பணியாக வரைபடம் தயாரிக்கப்பட்டு, புதுச்சேரி அரசின் நகர குழும அனுமதிக்கு அனுப்பப்பட்டு உள்ளதும், விரைவில் அனுமதி கிடைத்தவுடன் கழகத் தலைவர் அவர்களின் பொற்கரங்களால் கட்டுமான பணி தொடங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இக்கூட்டத்தின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறோம்.

மும்மொழி கொள்கையை ஏற்கும் வரை தமிழ்நாட்டிற்கான ஒருங்கிணைந்த பள்ளி கல்வித்திட்ட நிதியை தர முடியாது என்று ஆணவமாக பேசிய ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

பெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட புதுச்சேரி மக்களுக்கு புதுச்சேரி அரசு ஒன்றிய அரசிடம் கோரிய ரூ. 700 கோடி நிவாரணத்திற்கு வெறும் ரூ 61 கோடி வழங்கி ஒன்றிய அரசு புதுச்சேரி மக்களை வஞ்சித்துள்ளதை இக்கூட்டம் கண்டிப்பதுடன், ஒன்றியக் குழு ஆய்வு செய்து விடுபட்ட விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்கவும், புயல், மழையால் சேதமடைந்த தடுப்பணைகள், சாலைகளை போர்க்கால அடிப்படையில் செப்பனிடவும் இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

ஒன்றிய அரசின் 'சமகர சிக்ஷா அபியான்' எனப்படும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின் கீழ், புதுச்சேரி மாநிலத்திற்கு என்று கடந்த மூன்று ஆண்டுகளில் சுமார் ரூ. 120 கோடி அளவிற்கு ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து புதுச்சேரி மாநிலத்தில் இதுவரை அரசு பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள உள்கட்டமைப்பு வசதிகள் குறித்தும் மாணவர்களின் தேர்ச்சி சதவீதத்தை அதிகரிக்கும் வகையில் ஆசிரியர்களுக்கு எவ்வித பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது குறித்தும் அதன் மூலம் மாணவர்களின் கல்வி வளர்ச்சி வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்தும் புதுச்சேரி அரசு விரிவான வெள்ளை அறிக்கை வெளியிட இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

புதுச்சேரி மாநில தி.மு.கழக அவசர செயற்குழுக் கூட்டம் லப்போர்த் வீதியில் உள்ள தலைமைக் கழக அலுவலகத்தில் நடந்தது. கூட்டத்திற்கு அவைத்தலைவர் எஸ்.பி.சிவக்குமார் தலைமை தாங்கினார். துணை அமைப்பாளர் வி.அனிபால் கென்னடி எம்.எல்.ஏ., பொருளாளர் இரா.செந்தில்குமார் எம்.எல்.ஏ., மாநில துணை அமைப்பாளர்கள் ஏ.கே.குமார், அ.தைரியநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில கழக அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சிவா அனைவரையும் வரவேற்று, ஆலோசனைகள் வழங்கினார். கூட்டத்தில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நந்தா சரவணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சண். குமரவேல், கே.எம்.பி. லோகையன், டி. அருட்செல்வி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.